[1987 ஏப்ரல் 28

பத்மநாபபுரம் தொகுதி புலியூர்குறிச்சி உதயகிரிக்கோட்டையில் விவசாயக் கல்லூரி.

516—(*வினா எண் 7615) **திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதியில் புலியூர்குறிச்சி உதயகிரிக் கோட்டையில் விவசாயக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை, இரப்பர், கரும்பு போன்ற பயிர்கள் நெல்லுக்கு அடுத்தபடியாக இருந்துகொண்டிருக்கின்றன. அந்தப் பயிர்கள் பல்வேறுபட்ட நோய்களினால் பாதிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதன் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பதால் அந்த விவசாயிகளுக்கு உதவி செய்கின்ற முறையில் ஒரு வேளாண்மைக் கல்லூரியை ஆராய்ச்சி நிலையத்தோடு சேர்த்து ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அரசுக்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலம் அங்கே காலியாக இருக்கிறது. ஆகவே, அந்த இடத்தில் வேளாண்மைக் கல்லூரியும், ஆராய்ச்சி நிலையமும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி 1984-85 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அது அங்குள்ள மக்களுக்குப் பயனுடையதாக இருக்கிறது; தேவையைப் பூர்த்தி செய்துகொண்டு வருகிறது.

1987 ஏப்ரல் 28]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி இருக்கிறது என்று சொன்னார்கள். இன்றைக்கு அது மிகச் சிறிய அளவில், ஏற்கெனவே உள்ள ஒரு விவசாயக் கிடங்கோடு சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறதே தவிர கல்லூரி என்ற அளவில் செயல்படவில்லை. இந்தியன் கவுன்சில் ஃபார் அக்ரிகல்சுரல் ரிசர்ச் சென்டர் ஏற்கெனவே பல்வேறு விவசாயப் பயிர்கள் இருப்பதால் அங்கே ஆராய்ச்சி நிலையம் அமைக்க திட்டம் போட்டு, மாநில அரசிடம் இடமும் கேட்டிருக்கிறது. ஆகவே, பத்மநாபபுரத்தில், அரசுக்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலம் காலியாக இருப்பதால் அந்த இடத்தில், அக்ரிகல்சுரல் ரிசர்ச் சென்டரும் வேளாண்மைக் கல்லூரியும் ஏற்படுத்த மத்திய அரசோடு தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, எல்லா மாவட்டங்களிலும் ஒவ்வொரு ஆராய்ச்சிப் பண்ணை வைப்பது என்பது கடினமான காரியம். தேவையின் அடிப்படையில் அதுபற்றி யோசிக்கலாம். இன்றைக்கு கிள்ளிகுளம் என்ற இடத்தில் மூன்றாவது வேளாண்மைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன் : தலைவரவர்களே, இது என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட கேள்வி. இந்தக் கேள்வி சம்பந்தப்பட்ட புலியூர்குறிச்சி உதயகிரிக்கோட்டையில் அரசுக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் காலியாக இருக்கிறது. நாஞ்சில்நாடு இருக்கிற கன்னியாகுமரி மாவட்டம் நெல் நிறைந்த மாவட்டம். அங்கே விவசாய மக்களும் அதிகமாக இருக்கிறார்கள். இயற்கையின் காரணமாக பல்வகைப் பட்ட பயிர்கள் வளர்கின்றன. அவற்றை எல்லாம் கருத்திற் கொண்டு அங்கே ஒரு வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்த வேண்டு மென்று நீண்டகாலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்தக் கோரிக்கையை அரசு கனிவோடு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1987 ஏப்ரல் 28

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல மூன்றாவது வேளாண்மைக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு இருக்கிறது. ஆராய்ச்சிப் பண்ணை அமைப்பதுபற்றி அதிகாரிகளைக் கலந்துபேசி ஆலோசனை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: தலைவரவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் எந்த ஒரு 'புரஃபஷனல் காலேஜும்' கிடையாது. அங்கே அக்ரிகல்சர் காலேஜ் அமைப்பதற்கு நல்ல சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. அங்கே கல்லூரி தொடங்கவில்லை என்றாலும் ரீசர்ச் சென்டர் தொடங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, மத்திய அரசின் உதவியோடு ஒரு ரீசர்ச் சென்டர் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, மத்திய அரசு இப்படிப்பட்ட உதவியைச் செய்வதாக தற்போது என்னிடம் தகவல் இல்லை. உதவி செய்வதாக இருந்தால் அதுபற்றி ஆலோசனை செய்யலாம்.

திரு. எப். எம். இராசரத்தினம்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயத்தையே நம்பியிருக்கிற விவசாய மக்கள் நிறைந்திருக்கிறார்கள். அந்தத் தன்மையைக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை வழங்குகின்ற அடிப்படையில், திருப்பதிசாரம் என்ற இடத்தில் ஏற்கெனவே ஒரு விவசாயப் பயிற்சி நிலையம் இயங்குகிறது; அந்தப் பயிற்சி நிலையத்தை விஸ்தரித்து விவசாயக் கல்லூரியாகவோ அல்லது ஆராய்ச்சிப் பண்ணையாகவோ அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, கோவையில் இருக்கிற விவசாயப் பல்கலைக் கழகம் பல ஆராய்ச்சிப் பண்ணைகளை ஆங்காங்கே வைத்திருக்கிறது. தேவைப்பட்டால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ஆராய்ச்சிப் பண்ணை வைப்பதுபற்றி, அது சம்பந்தப்பட்ட விஞ்ஞானிகளைக் கலந்து ஆலோசிக்கலாம்.

1987 ஏப்ரல் 28]

திரு. அ. வெங்கடாசலம் : தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியான்மலையில் அண்ணா வேளாண்மைப் பயிற்சி மையம் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அங்கே ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைப்பதுபற்றி அரசு அதிகாரிகள் பரிந்துரை அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்குப் போதிய கட்டடங்களும் போதிய இடவசதியும், போதிய நீர் வசதியும் குடுமியான்மலையில் சிறப்பாக அமைந்திருக்கின்றன. புதுக்கோட்டையிலே 2,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் பயிர் ஆராய்ச்சி நிலையம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. எனவே புதுக்கோட்டை மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம் என்பதைக் கருத்தில் கொண்டு, அங்கே அனைத்து வசதி இருக்கின்ற காரணத்தால் புதுக்கோட்டையில் ஒரு வேளாண்மைக் கல்லூரியை அமைக்கின்ற கருத்துருவும் வந்திருக்கின்ற நிலைமையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை அமைக்கின்ற நடவடிக்கையை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு வசதியும் இருக்கிற இடத்தில் கல்லூரி வைப்பது நல்லதல்ல. அவையெல்லாம் இல்லாத இடத்தில் கல்லூரியை வைத்து அந்த இடத்தை வளர்ப்பதுதான் இந்த அரசின் நோக்கமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு உரம், பூச்சி மருந்து மானியம்.

517—(*வினா எண். 7980) திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உரம், பூச்சி மருந்து வழங்கும் மானியத்தில் ஒரு பகுதியை கூட்டுறவுக் கடனுக்காக நிலுவையில் வரவு வைத்து விவசாயிகளின் கடனை அடைத்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?